**செ.வெ.எண்-18** **நாள்-11.08.2021**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் எதிர்வரும் சம்பா பருவத்திற்கு தேவையான அனைத்து நெல் இரக விதைகள், நுண்சத்துக்கள், உயிர் உரங்கள் மற்றும் பூஞ்சாண உயிர் கொல்லிகள் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் நெல் விதைகள், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மற்றும் விதை கிராமத்திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. தற்போது அரியலூர் மாவட்டத்திற்கு தேவையான CR 1009 Sub 1, CO (R) 50, ADT 39 நெல் விதைகள் போதுமான அளவு அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளது.

சிறுதானிய விதைகளான கேழ்வரகு விதை கிராமத் திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

உளுந்து மற்றும் கடலை விதைகள் விதை கிராமத் திட்டத்தில் 60 சதவீத மானியத்திலும் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 50 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகிறது.

இது தவிர நுண்சத்துக்கள், உயிர் உரங்கள் மற்றும் பூஞ்சாண உயிர் கொல்லிகள் 50 சதவீத மானியத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் (NADP) மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் (NFSM) கீழ் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட விதைகள் மற்றும் இடுபொருட்களை சம்மந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்திலிருந்து சம்பா சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் வாங்கி பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**